# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–2220 037
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 134/2017/ந

ஆணை எண்: 149/2017

நாள்: 15/06/2017

| | |
|---|---|
| 14.06.2017 நாளைய தினகரன் நாளிதழ் செய்தி | முறைமன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாக பதிவு செய்யப்பட்டது |
| நகராட்சி ஆணையர், ஆவடி நகராட்சி. | எதிர் மனுதாரர் |

## ஆணை

14.06.2017 நாளிட்ட "தினகரன் நாளிதழில்" சாலைகளை சீரமைக்காத அதிகாரிகளை கண்டித்து ஆவடி நகராட்சி அலுவலகத்துக்கு பூட்டு போட முயற்சி என செய்திகள் வெளிவந்தன. இச்செய்தியினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாகப் பதிவு செய்து அன்றைய தினம் (14.6.2017) மாலையே ஆவடி நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதன்படி 14.6.2017 மாலை 3.00 மணிக்கு ஆஜரான ஆவடி நகராட்சி ஆணையர் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் வெளிவந்துள்ள செய்தி/நிகழ்வு தொடர்பாக கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயிலில் சாலை அமைப்பதற்கு ஒப்பந்த புள்ளிகள் போடப்பட்டிருந்தன. நகராட்சி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரியதில் சிலர் தங்களது பிணாமிக்கு

ஒப்பந்தம் சாதகமாக கிடைக்காது என்பதற்காக பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளது போன்ற நடவடிக்கைகளுக்கான முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், அவர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு வருவதற்கு முன்பே காவல் துறையினால் அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர். எதிர்காலத்தில் இது போன்று சுய ஆதாயம் பண்ணுவதற்காகவும், சுய விளம்பரம் தேடி அதன் மூலம் பொது மக்கள் முழுவதும் பயன்படுத்தக்கூடிய அரசு அலுவலகத்தை அவமதிக்கும் வகையில் செய்யப்பட்டாலோ அல்லது செயல்பட முயற்சித்தாலோ அத்தகைய நபர்கள் குறித்தும், நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் உடனடி அறிக்கைகள் அனுப்பி இதுபோன்ற நிகழ்வுகள் தடுக்கப்பட உரிய நடவடிக்கைகளை இனி வருங்காலங்களில் மேற்கொள்ளப்படும்" எனக் குறிப்பிட்டார்.

நகராட்சி ஆணையரது மேற்படி விளக்கங்கள் ஏற்கப்பட்டன. நகராட்சி அலுவலகமென்பது அரசியலமைப்புச் சட்டம் கூறு 243 (2)ன்படி ஏற்படுத்தி அரசின் திட்டங்களை செயல்படுத்தும் ஓர் அலுவலகம் மற்றும் பொது மக்களுக்கு பணிபுரிய ஏற்பட்ட பொது சொத்தாகும். எனவே, எந்த ஒரு நபரோ அல்லது அமைப்போ தங்களது கோரிக்கை தொடர்பாக சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்ட வகையில் மட்டுமே தீர்வு காண வேண்டும். சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளில் ஈடுபடுவதோ அல்லது ஈடுபட முயற்சிப்பதோ கண்டிக்கத்தக்கதும், தண்டனைக்குரியதுமாகும். எனவே இத்தகைய செயல்பாடுகள் நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆணையிடப்படுகிறது. மேலும், பத்திரிக்கைச் செய்தியில் வெளிவந்துள்ள சாலைகள் செப்பனிடல் தொடர்பான பணிகளை உரிய காலக்கெடுவிற்குள் விதிமுறைகளின்படி முறையாக மேற்கொண்டிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 19/6/17

**பெறுநர்**

நகராட்சி ஆணையர்,

ஆவடி நகராட்சி,

ஆவடி, சென்னை.